DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 9/2024

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| Name | நந்தகோபால் |
|---|---|
| Father / Husband Name | வெங்கடாஜலபதி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சென்னையில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஹரிஷ்குமார் என் அக்கா மகன் ஆவார். கடந்த 23.01.2023 ம் தேதி இரவு 12.00 – 1.00 மணியளவில் மேல்மருவத்தூர் அருகே திருமணத்திற்கு சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தில் ஹரிஷ்குமாரும் அவரது நண்பரும் கருங்குழி அருகே வரும்போது ஹரிஷ்குமார் அவரது நண்பர் இருசக்கர வாகனத்தை ஓட்ட இவர் பின்னால் உட்கார்ந்து வரும்போது திடீரென்று பிரேக் போட்டு விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவர் தலையில் அடிபட்டு சிகிச்சையில் இருந்தார். பின்னர் மறுநாள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பின்னர் அவரின் பிரேத்தின் மீது போலிசார் விசாரணை செய்தார்கள், நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது நண்பர் மூலமாக தெரியும். புகார் கொடுக்க நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். நான் கையொப்பம் எங்கு வைத்து சென்றேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன். இறந்துபோன ஹரிஷ்குமார் என் அக்கா மகன். நான் போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.